# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**மனு எண். 1447/ஊராட்சி/2018**

**நாள்: 25/10/2018**

பெறுநர்
சி. குமார்,
40, தெற்கு தெரு, தொட்டியம்,
சின்னசேலம், விழுப்புரம், – மனுதாரர்

ஆ. துரை,
ஊராட்சி செயலாளர்,
தொட்டியம் ஊராட்சி,
சின்னசேலம்,
விழுப்புரம் மாவட்டம். – எதிர் மனுதாரர்

## ஆணை

விழுப்புரம் மாவட்டம், தொட்டியம் ஊராட்சி, 40, தெற்கு தெருவில் வசிக்கும் திரு. சி. குமார் என்பவர், அவருடைய 20.10.2018 நாளிட்ட புகார் மனுவில் தொட்டியம் ஊராட்சி செயலர் திரு. ஆ. துரை மீது கீழ்கண்டவாறு புகார்களை தெரிவித்து, அவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்:–

1. திரு. கோவிந்தன், 2வது வார்டு உறுப்பினராக இருந்தபோது அவர் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் வேலை செய்ததாக சம்பளம் கொடுக்கப்பட்டுள்ளது.

2. பள்ளியில் பகுதிநேர ஆசிரியராக பணிபுரிந்த திரு. கோவிந்தராசு அவர்களுக்கு MGNREGA திட்டத்தில் வேலை செய்ததாக சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

3. ஊராட்சி செயலரின் தம்பி மனைவி சுகன்யாவிற்கு மற்றவர்களை விட அதிக நாட்கள் வேலை செய்ததாக கணக்குக் காட்டியுள்ளார்.

4. 2015 – 16 ல் 100 நாட்களுக்கு யாரும் வேலை செய்யவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் வழங்கப்பட்டது. ஆனால் வட்டார வளர்ச்சி அலுவலர் 2015 – 16 ல் 43 மனித சக்திகளுக்கு மிகை ஊதியம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

5. 1.8.2016 முதல் 12.8.2016 வரை ஊராட்சியில் யாருக்கும் வேலை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அந்த காலத்திற்கு வேலையும் வழங்கி, ஊதியமும் வழங்கப்பட்டுள்ளது.

2. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் எடுக்க வழிவகையில்லை. எனவே, இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்பலாம் என முடிவெடுக்கப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து, விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25-ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி/அனுப்பப்படுகிறது

செயலாளர்.

பெறுநர்
சி. குமார்,
த/பெ. சின்னக்கண்ணு,
40, தெற்கு தெரு, தொட்டியம்,
சின்னசேலம், விழுப்புரம் மாவட்டம்.

<u>நகல்</u>

1. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   விழுப்புரம் மாவட்டம்,
   விழுப்புரம். (இணைப்புகளுடன்)
2. முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்
3. செயலர் அவர்களின் நேர்முக எழுத்தர்
4. உதவி பிரிவு அலுவலர் (ஊராட்சி)